1 காலணா Regd. No. M. 281


சுதந்திரச்சங்கு

“ சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கெல்லா மெடுத்தோதுவோமே ”

வாரம் மும்முறை வெளிவரும் ஆசிரியர் .
வருட சந்தா 4½ ரூபா ACC-NO-10813 சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

ாரியாலயம் : பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 28-1-33

கொடிது, வறுமை கொடிது



வரிப் பளுவைத் தாங்க முடியாது விவசாயிகள் தவிப்பதால் வரியில் எட்டிலொரு பங் கைக் குறைக்க வேண்டுமென்று சென்னைச் சட்ட சபையில் தீர்மானம் வந்தபோது ரேவினியூ மெம்பரான காம்பெல் நாட்டின் நிலைமை சிறிதும் அறியாது அத்தீர்மானத்தை எதிர்த்தார். கிரா மங்களில் குடியானவர்கள் நகைகளை விற்றும், ஆடு கோழிகளை விற்றும் கிஸ்தி கட்ட வேண்டி யிருப்பதை சர்க்கார் அறிந்து கொள்ளவில்லையா? எத்தனை பெரிய மிராசுதாரர்கள் இந்த வருடம் மஞ்சட் கடுதாசி நீட்டப் போகிறார்க ளென்பதையாவது சர்க்கார் அறியலாகாதா? வேணுமானல் காம்பெல் துரை கிராமங்களில் சென்று கண்ணார நோக்கட்டும். ‘கொடிது, வறுமை கொடிது’ என்ற கூக்குரலே அங்கு எங்கும் கேட்கும். பட்டணங்களிலோ வேலை யில்லாத் தவிப்பின் காரத்தை நாம் காண்கிறோம்.

உணர்ச்சியற்ற காம்பெல்

சரி, "இம் மாகாணத்தில் ரயத்வாரி நிலங்களின் தீர்வையில் 100க்கு 12½ வீதம் இந்தப் பசலியில் வஜா செய்ய வேண்டும்" என்ற தீர்மானத்தை சென்னை சட்ட சபை பெருவாரியான ஓட்டுகளால் நிறைவேற்றி விட்டது. இனி சர்க்கார் என்ன செய்யப்போகின்றனர்? சட்ட சபையின் கருத்தை மதித்தே காரியங்கள் நடத்துவதாக அவர்கள் பறை சாற்றி வருவது உண்மையானால், குடிகளின் நன்மையைக் கருதி அவர்கள் நம்மை ஆண்டு வருவது வாஸ்தவமானால் இந்தத் தீர்மானத்தை அவர்கள் உடனே அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். என்ன நடக்கிறதென்று பொறுத்துப் பார்ப்போம்.

ஆனால் தீர்மான விவாதத்தின்போது சர்க்கார் தரப்பில் பேசிய ரெவினியூ மெம்பரின் சில குதர்க்க வாதங்களை நாம் மண்டையிலடித்தே தீர வேண்டும். "சென்ற ஸெட்டில்மெண்டில் கணக்கிடப் பட்டது போன்ற அந்த அளவிற்கு இன்னும் ஒரு ஜில்லாவிலும் விலை இறங்கவில்லை." என்றார் அவர். ஏதோ ஒரு கோளாறு காரணமாக ஒரு சமயத்தில் உடலின் உறுப்புக்கள் வீக்கங் கொண்டால் அதையே நாம் சாதாரண உடலின் பருமனாகக் கொண்டு விட முடியுமா? அதேபோன்று திடீரென ஏற்பட்ட சில நிலைமைகள் காரணமாக போன ஸெட்டில்மெண்டு சமயத்தில் விலை வாசிகள் உயர்ந்திருந்தால் அதையே எப்படி சர்க்கார் நிலையானவையாக வைத்துக் கொள்ள முடியும் எனக் காம்பெல்லைக் கேட்கிறோம். சுமார் அறுபது வயதானவர்கள் எல்லாம், இப்பொழுது தேசத்தில் ஏற்பட்டுள்ள பணப் பஞ்சத்தைப் போன்றதொரு பஞ்சத்தை தங்கள் ஆயுளில் எப்போதும் கண்டதே யில்லை எனச் சொல்லுவது அந்த அதிகாரிக்குத் தெரியுமா?

"சாதாரணமாக அறுவடை காலத்தில் விலை இறங்குவ தென்பது சகஜமே" என்று வாய் கூசாமல் பேசி யிருக்கிறார் அந்தத் துரை. அறுவடை காலத்தில் தானே குடிகள் கிஸ்தி கட்ட வேண்டி யிருக்கிறது? அப்பொழுது தானே அவர்களுக்குப் பணம் வேண்டும்? பிற்பாடு விலை வாசிகள் உயர்ந்தால் அதனால் அவர்களுக்கு என்ன பிரயோஜனம்? இன்னும் நான்கு வருஷங்கள் கழித்து விலை வாசிகள் ஏறி, அப்பொழுது விவசாயிகள் நெல்லை விற்று, தீர்வையைச் செலுத்தினால், காம்பெல் துரை அது வரை பொறுத்திருந்து வரிப் பணத்தை வாங்கிக் கொள்ளத் தயாரா யிருக்கின்றாரா அல்லது இப்பொழுது அவர் தீர்வைப் ப திற்குப் பதிலாக நெல்லை வாங்கிக் கொள் டும்; இன்னும் கொஞ்ச காலத்திற்குப் விலைவாசிகள் ஏறுகையில் அவற்றை சர்க்கா விற்றுப் பணமாக்கிக் கொள்ளட்டுமே!

இம்மட்டோ! "உலகின் மற்ற பாகங்களிலும் இதே நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கும் இதே மாதிரிதான் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே எல்லோரும் சேர்ந்து கஷ்டப்படத்தான் வேண்டும்" என்று தன் நெஞ்சத்திற்கே துரோக மிழைத்துப் பேசினர். இவருக்கென்ன குறைவு! மாதம் பிறந்தால் ஆயிரக் கணக்கில் சம்பளம் வந்து விடுகிறது. ஜேபியில் கலகலவெனக் காசுகள் குலுங்கக் குலுங்க, தலையை ஆட்டி, அசைத்துக்கொண்டு "எல்லோரும் சேர்ந்து கஷ்டப்பட வேண்டும்" என்று இவர் உபதேசிப்பது முதல் தரமான ஜகஜ்ஜால மல்லவா? பண நெருக்கடியை உத்தேசித்து, கஷ்டத்தில் குடிகளுடன் ப கெடுத்துக் கொள்ள வேண்டுமானால் பெரி அதிகாரிகள் சம்பளம் வாங்காமல் சில மாத கள் வேலை செய்யட்டுமே!

"எல்லா விடங்களிலும் ஒரே விதமா கஷ்டம் வியாபித்திருக்கிறது" என்று சொன் அதே வாய், "பல ஜில்லாக்களில் வஜாவுக் அவசியமே யிராது" என்ற விஷயத்தை கக்கி யிருப்பது விந்தையே. ஒவ்வொ ஜில்லாவின் விவசாய நிலைமையும் காம்பெ துரைக்குத் தெரியுமா என்று கேட்கிறோ

வரியை வஜா செய்து விட்டால் நீர்ப்பாசன சௌகரியங்களை நிறுத்தி விட வேண்டி இரு குமென்று மிஸ்டர் காம்பல் மிரட்டியிருக்கிறா இவர் கூறும் "சௌகர்யங்கள்" எப்படிப் பட்டவை யென்பதை விவசாயிகள் வேண மட்டிலும் அறிவர். பயிர்களுக்குப் பாய்ச்சப் போதுமான தண்ணீரில்லாமல் தாளம் போடு கஷ்டம் அவர்களுக்கல்லவா தெரியும்! ஒரு குழி நிலம் கூட இந்த நாட்டில் வைத்து கொள்ளாத காம்பெல் துரைக்கு குடியானவ துயரம் என்ன தெரியும்? தீர்மானமென்னமோ நிறைவேறி விட்டது. சர்க்கார் வரியைக் குறைத்து வசூலிப்பார்களா அல்லவா வென் பார்ப்போம்.

கைராட்டை சரித்திரமும், புத்துயிரும்

(தபாற்கூலி உள்பட 6 அணா ஸ்டாம்பு அனுப்பவு

"பிளீஸ்ட் டு ஸ்டேட்"

டெல்லி அஸ்ஸெம்பிளியிலும் மாகாண சட்ட சபையிலும் அங்கத்தினர்கள் சர்க்காரைக் கேள்விகள் கேட்கும்போது ஒரு பல்லவியையும் பின்னேடு பாடுகின்ருர்கள். 'வில் தி கவர்ன்மெண்ட் பி பிளிஸ்ட் டு ஸ்டேட்' (Will the Government be pleased to state) அதாவது 'சர்க்கார் பதிற் சொல்ல இஷ்டம் கொள்வார்களா' என்பதே அப் பல்லவி.

சட்ட சபைகளில் கேள்விகளைக் கேட்பதற்கென்று தனி நேரம் உண்டு. அந்த நேரத்தில் சர்க்கார் உத்யோகஸ்தர்களும், மந்திரி அண்ணுத்தைகளும் திருபிருவென விழிப்பதும் உண்டு. பாகற்காயோ, வேப்பங்காயோ சாப்பிடுவதுபோல முகத்தைச் சுளித்துக்கொண்டு ஒரோர் சமயங்களில் பதில் சொல்வார்கள். 'அடுத்தது காட்டும் பளிங்கு போல நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' என்ற வரிகளையே அப்போது நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சில கேள்விகளுக்கு மேதாவிகளான மந்திரிகள் மௌனம் சாதித்து விடுவர். சிலபோது, "கவர்ன்மெண்டு பதிற்சொல்ல விரும்பவில்லை" என்று தர்பார் தோரணையில் கூறுவார்கள். சில கேள்விகளுக்கு "பதில் பகிரங்கமாகச் சொல்ல முடியாது" என்று சாக்கு கூறுவார்கள். சில சமயங்களில், "கவர்ன்மெண்டுக்குத் தகவல் கிடைக்கவில்லை" என்று உளறும் போது தான் வேடிக்கையாயிருக்கும். தகவல்களைச் சேகரிக்க சர்க்காருக்கு தந்தி இலாகா இல்லையா? அல்லது தகவல்கள் கொடுக்கும்படி கீழதிகாரிகளை வற்புறுத்த மந்திரிகளுக்கு அதிகார மில்லையா, விருப்பமில்லையா? மிகமிக முக்கியமான கேள்விகளுக்கு போதிய அளவு காலமிருந்த போதிலும் இம்மாதிரியான பதில்கள் கிடைப்பது வரவர சகஜமாய் விட்டது.

ஒரோர் சமயங்களில் கேள்வி ஒரு விஷயத்தைப்பற்றி யிருக்கும். ஆனல் அதற்கு அதிகாரிகளின் பதில் வழா வழா வென்று வேறு விஷயத்தை விவரிப்பதா யிருக்கும். சென்னைச் சட்ட சபையில் 'பதில் இல்லை' 'தகவல் இல்லை' என்ற விடைகளைத் தருவதில் சட்ட மந்திரி கிருஷ்னான் நாயரும், ஹோம் மெம்பர் உஸ்மான் சாயபுவும் நிபுணர்கள். பிற நாடுகளில் ஒரு பொறுப்புள்ள உத்யோகஸ்தன் இவ்வாறு சட்ட சபையில் பதில் சொல்வானு?

ஜெயில் நிர்வாக ஊழல்கள்

கண்ணனூர் ஜெயில் சூப்ரண்டின் பெயர் காப்டன் ஹிட்சின்ஸ். இந்த மகானின் ஆட்சியின் கீழ் தான் பல ராஜீயக் கைதிகள் அங்கு அடிக்கப்பட்டனர். ஸ்ரீயுத கேசவன் நாயர் என்ற தேச பக்தரும் அங்கு உண்ணு விரத மேற்று நான்கு வார மாயிற்று. இந்த 'கலாட்டா' அதிகாரியின் ஆட்சியைப் பற்றியும், ஜெயிலில் நிர்வாக ஊழலைப் பற்றியும் விசாரிக்க பொது ஜனத் தலைவர்க ளடங்கிய கமிட்டியை உடனே நியமிக்க வேண்டு மென்பது அநேகருடைய அபிப்பிராயமாகும். அத்தகைய கமிட்டி ஏற்படாதவாறு தடுப்பதற்கு சென்னை சர்க்கார் இப்போது சூழ்ச்சி செய்வதாகத் தெரிகிறது. அந்த ஹிட்சின்ஸையும், அந்த ஜெயிலில் பிரம்பு பிடித்த வார்டர்களில் 30 பேர்களையும் வேறிடங்களுக்கு மாற்றி விடப் போகிருர்க ளென்று 'பிரீ பிரஸ்' செய்தி ஒன்று சொல்கிறது. சிலர் மாற்றலாகிப் புறப்பட்டும் விட்டார்களாம். ஹிஜ்லி விசாரணைக் கமிட்டி, நாஸிக் சிறை நிர்வாக விசாரணை முதலியவைகளில் ஜெயில் அதிகாரிகளின் கொடுமைகள் உலகுக்குப் புலனுயின. அவ்வாறு சென்னையில் ஹிட்சின்ஸ் அகப்பட்டுக் கொண்டு விழிக்கக் கூடா தென்பது சர்க்காரின் விருப்பமா? அல்லது இந்த ஹிட்சின்ஸின் லீலைகளை வேறு சிறையிலுள்ள ராஜீயக் கைதிகளும் அநுபவிக்க வேண்டு மென்பது சர்க்காரின் விருப்பமா?

மதுரை ஜெயிலுக்கு ஒரு ஹௌவேதுரையும், கண்ணனூர் ஜெயிலுக்கு ஒரு ஹிட்சின்ஸ் துரையும், பல்லாரி ஜெயிலுக்கு ஒரு தடியடி வீரரையும், ராஜமஹேந்திரவரம் ஜெயிலுக்கு இன்னெரு கெடுபிடிக்காரரையும் இந்த சர்க்கார் எங்கிருந்து பிடித்துக் கொண்டு வந்தார்களோ தெரிய வில்லை.

கொலை, களவு செய்து விட்டு வந்திருக்கும் கைதிகளை இந்தியச் சிறையில் எந்த விதமாக நடத்துகின்ருர்களோ அதே மாதிரியாக இராஜீயக் கைதிகளையும் நடத்த வேண்டு மென்ற எண்ணம் சர்க்காருக்கு இருக்கும் வரை ஜெயில் நிர்வாகம் ஊழலாகவே இருக்கும். அதிகாரிகளும் தருதலைகளாகவே ஆட்சி புரிவார்கள். அவ்வப்போது ஜெயிலதிகாரிகளைக் கண்டிப்பதை விட சட்ட மந்திரி என்ற பேர்வழிக்கு வேறென்ன வேலை?

கண்ணீர் மண்ணில் போகவோ?

"மனிதனை அடிமையாக விலைக்கு வாங்கக் கூடாதென்ற சட்டத்தை 1832-ம் ௵த்திலேயே பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் நிறைவேற்றி விட்டது. ஆனால் 1842ம் ௵ முதல் 1921ம் ௵ வரை இந்தியாவினின்று இதர பிரிட்டிஷ் நாடுகளுக்கு ஒப்பந்தக் கூலிகளாகச் சென்றார்களே அதில் அடிமைத்தனம் இல்லையா? கேவலம் புத்தகத்தில் மட்டும் தானா சட்டம்?" என்று ஸ்ரீயுத லங்கா சுந்தரம் சென்னைப் பிரசங்கமொன்றில் அன்று குறிப்பிட்டார்.

இன்றைய தினத்தில் கணக்கெடுத்தால் உலகில் அநேக கண் காணாச் சீமைகளில் சுமார் 27 லக்ஷம் இந்தியர்கள் சிதறிக் கிடக்கின்றனர். இவ்வாறு நம் தாய் நாட்டை விட்டு, வயிற்றுக் கொடுமை தீர்க்க ஏழைகள் ஓட ஆரம்பித்தது 1842-ம் ௵த்தில் தான். அப்போது மோரிஸ் தீவில் கூலி வேலை செய்வதற்காக இந்தியாவில் முதன் முதலாக ஒப்பந்தக் கூலிகள் சேர்க்கப்பட்டனர். அந்தக் கூலிக் கப்பல் நகர்வதற்கு சர்க்காரும் அநுமதி தந்தனர். அன்றைய தினத்தினின்று இந்த 'அடிமை' முறையும் தாண்டவமாடத் தொடங்கியதாகக் கூறலாம்.

அந்த ஏழைகளின் துயர வாழ்வை என்னென்பது? ஒவ்வொரு கூலியும் குறிப்பிட்ட ஒரு எஸ்டேட்டுக்கு குறிப்பிட்ட பல வருஷங்களுக்கு 'அடிமை' யாக்கப்படுவான். மனித ஹிருதயமே இல்லாதவர் அங்கு அக் கூலிகளை 'மானேஜ்' செய்வர். ஒரு சொந்தக்காரன் தனது எஸ்டேட்டை இன்னொருவனுக்கு விற்கும் போது கூலிக்காரர்களோடும் சேர்த்தே விற்று விடுவது வழக்கம்! இது அடிமை வர்த்தக மன்றோ? இதை சட்ட ரீதியாக பிரிட்டிஷ் சர்க்கார் ஏன் தடுக்காதிருக்கலாகாது?

மலேயா போன்ற தீவுகளுக்கு நம்மவர் கங்காணிகளாக போவதைப் பற்றிக் கேள்விப்படுகின்றோம். தென்னாப்பிரிக்கா அரசாங்கம் ஆங்குள்ள இந்தியர்களை ஆசியா சட்டத்தின் கீழ் நசுக்கி விரட்டுவதையும் பற்றி கேள்விப்படுகின்றோம். இந்திய அரசாங்கமோ இத்தனைக்கும் வாயை மூடிக் கொண்டு கிடக்கின்றது. "ஏழைகளங்கு சொரியும் கண்ணீர் வெறும் மண்ணில் கலந்திடவோ?" என்ற பாரதியாரின் வரிகளைக் கூறி நாம் ஆண்டவனிடம் தான் முறையிட வேண்டியிருக்கிறது.

சங்கு போன் நெ. 8088

மற்றொரு தலை யறட்டை

'பாட்ரீஷியா கெண்டால்' என்று ஒரு வெள்ளைக்காரி தலையறட்டைத் தனமாக அதிகப்ரசங்கம் செய்வதற்கு ஆரம்பித்திருக்கிறாளாம். "உலகத்தின் எல்லா நாடுகளின் க்ஷேமமும் இந்தியா வென்ற நாட்டின் க்ஷேமத்தையே பொறுத்திருக்கிறது. இந்திய மக்கள் அபிவிர்த்தி யடைந்தால் தான் இதர தேசத்தினரும் க்ஷேம மடையலாம். இந்த இந்தியாவை நியாயத்துடன் இன்று பிரிட்டன் பரிபாலனம் செய்து வருகிறது. ஆகவே பிரிட்டனை நாம் போற்ற வேண்டும். பிரிட்டிஷ் மக்களின் மொத்த வருமானத்தில் ஐந்திலொரு பங்கு இந்தியாவினின்றே கிடைப்பதென்பது வாஸ்தவம். ஆனால் அந்த லாபத்தை உத்தேசித்து பிரிட்டிஷார் இந்தியாவை ஆளவில்லை." என்று இந்த மாது கூறியிருக்கிறாள்.

பிரிட்டிஷ் ஜனங்களின் மொத்த வருமானத்தில் ஐந்திலொரு பங்கு இந்தியாவினிடமிருந்து கறக்கப்படுகிறதென்பது சரியான விஷயமே. ஆனால் அந்த நன்றியை ஒரு ஸாமுயேல் ஹோரும், ஒரு ராம்சே மாக்டனல்டும் உணர்ந்து கொண்டு இந்தியாவைப் பரிபாலிக்கின்றார்களா வென்று ஆராய்ச்சி செய்தால் அது வேறு விதமாயிருக்கும்.

அதற்குப் பிறகு இந்தத் தலையறட்டை காந்திஜியைத் தாக்கிப் பேசினாளாம். "காந்தி என்பவர் ஓர் மாயாவி. இந்தியர்களில் முக்கால்வாசிப் பேர் கடன்காரர்களிடம் அகப்பட்டுக் கொண்டு தவிக்கின்றனர். அவர்களை விடுதலை செய்ய காந்திஜி எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள வில்லை." என்று கெண்டால் ஒரு புகார் விடுத்திருக்கிறாள்.

கடன் பட்டுக் கலங்குபவர்களின் தொல்லையைத் தீர்ப்பதற்கு காந்திஜி எப்போதும் தயாராயிருக்கின்றார். ஆயினும் தற்போதுள்ள பிரிட்டிஷ் அரசாங்க மன்றோ அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். இந்தியாவில் எந்த வேலையையும் காந்திஜியே செய்ய வேண்டுமென்றிருப்பதாயின் அரசாட்சியை அவருடைய இஷ்டப்படி விடட்டும்; பிறகு பார்க்கட்டும். வெறுமனே ஏதாவது காந்தி மீது குற்றம் சொல்ல வேண்டுமென்பதற்காக தலையறட்டைத் தனமாகப் பிதற்றியுள்ள இந்தக் கெண்டாலின் கிண்டலுக்கு ஆங்குள்ள இந்திய அன்பர்கள் தகுந்த சவுக்கடி கொடுப்பார்களா?

சட்ட சபையும், தீண்டாமை விலக்கும்

(ரங்கய்யர் மசோதாவைப் பற்றி மகாத்மாவின் அபிப்பிராயம்)

சர்க்காரின் முடிவு மூலமாக ஆண்டவனின் திருவுள்ளத்தை நான் அறிய வேண்டும். என்னை அவர் நன்கு சோதிக்க விரும்புகிறார். அப்படியானால் அதற்கான ஆற்றலை அவர் எனக்கு அளிக்க வேண்டும்.

அகில இந்திய மசோதாவுக்கு அனுமதி தந்தது மூலமாக சர்க்கார் தங்களையுமறியாமலேயே ஹிந்து மதத்தையும், சீர்திருத்தக்காரர்களையும் சண்டைக் கழைத்திருக்கின்றனர். பிறந்தது முதல் சீர்திருத்தக்காரனாக இருந்து வரும் நான் சர்வ அடக்கத்துடன் அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்; ஒவ்வொரு ஹிந்துவும் அங்ஙனம் தான் செய்ய வேண்டும். நான் எந்தக் கண்களைக் கொண்டு படிக்கிறேனோ அதே கண்களைக் கொண்டு ஸனாதனிகள் அகில இந்திய மசோதாவைப் படிப்பார்களானால், அவர்கள் கூட அதை எதிர்க்கவே மாட்டார்கள். ராஜீய, பிரஜா உரிமைகளை ஜாதி ஹிந்துக்களுக்குச் சமமாக ஹரி ஜனங்களுக்கு அளிப்பதில் தங்களுக்கு எவ்வித ஆட்சேபமுமில்லையென ஸனாதனிகள் என்னிடம் சொல்லவில்லையா? எத்தனையோ தடவை எழுதியில்லையா? அதாவது சட்ட சம்மதமான விஷயங்களில் ஹரி ஜனங்களை ஹிந்துக்களுடன் சரிசமமான நிலையில் நடத்த அவர்களுக்கு ஆட்சேபமில்லையெனத் தெரிகின்றது. மனச்சாட்சியை மற்றொரு மனிதருக்கு விரோதமாக உபயோகிக்க சட்டத்தைத் துணையாகக் கொள்ளக் கூடாது. தீண்டாதவரைத் தொட்டு விடுவதால் ஏற்படும் தீட்டு கொஞ்சம் ஜலம் சாப்பிடுவதாலோ அல்லது ஸ்நானம் செய்வதாலோ நீங்கி விடுகிறதென்பதற்குச் சாதகமான பாகங்களையெல்லாம் என்னுடன் வாதித்த சாஸ்திரிகள் எனக்கு எடுத்துக் காட்டினர். கோயில் உள்பட எந்தப் பொது விடத்திலும் செல்லும் தீண்டாதவருக்குத் தண்டனை விதிப்பதைப் பற்றிச் சாஸ்திரத்தில் எந்த இடத்திலும் சொல்லப் பட்டிருக்கவில்லை. ஒரு புனிதமான விதியை மீறியதற்காகத் தீண்டாதாரைத் தண்டிக்க சட்ட உதவியைப் பெறலாகாது என்று ஏற்படுகின்றதல்லவா?

கோயில் பிரவேசத்திற்கு ஆதரவாக பொது ஜன அபிப்பிராயம் நன்றாகப் பழுத்திருக்கையில் பெரும்பாலோரின் அபிப்பிராயத்தைத் துவைத்துப் போட சட்டத்தின் உதவியை நாடுவது சரியல்ல. ஸனாதனிகள் எப்படி முடிவு செய்தாலும் சரி, கோயில் பிரவேச இயக்கம் இப்பொழுது, சர்க்கார் முடிவிற்குப் பிறகு தெற்கே குருவாயூரிலிருந்து, வடக்கே ஹரித்துவாரம் வரையில் வியாபிக்கிறது. எனது உபவாசம் தற்போது ஒத்தி வைக்கப் பட்டிருந்தாலும், இனி குருவாயூரை மட்டும் பொறுத்ததாக யில்லாமல், பொதுவாக எல்லாக் கோயில்களையும் பொறுத்ததாக விருக்கிறது.

என்னை யறியாமலேயே எனது வாழ்க்கையில் ஒரு காரியம் மற்றொரு காரியத்தில் கொண்டு போய் விடுகிறது. நான் சென்னை மசோதாவைப் பற்றி மாத்திரமே கவனஞ் செலுத்தி வந்தேன். அது எனக்குப் போதுமானது. பெரியதொரு நெருக்கடிக்கு நான் அப்பொழுது தயாராகவில்லை. ஆனால் அந்த நிலைமை இப்பொழுது தானாகவே ஏற்பட்டு விட்டதால் நான் சற்றும் பின் வாங்கப் போவதில்லை.

ரங்கய்யர் மசோதா நீண்ட நாள் தாமதப் பட்டு, கடைசியில் சட்டமாகாமலேயே போய் விடக் கூடுமென எண்ணும்படி சர்க்கார் அறிக்கை இடம் கொடுக்கிறது. ஆனால் ஹிந்துக்களின் உணர்ச்சி கிளர்ந்தெழுந்தால் ஒரு நிமிஷத்தில் மசோதா சட்டமாகி விடும். இனி வெறும் பிரசுரம் மட்டும் போதாது. மகத்தான தியாகங்கள் செய்ய வேண்டும். தீண்டாமை விலக்குக்கு கோயில் பிரவேச அனுமதி யென்பது இன்றியமையாததாகும். இதுதான் புதிய வாழ்வை ஏற்படுத்தும். ஹரி ஜனங்களின் பொருளாதார முன்னேற்றத்தால் மட்டும் உயரிய வாழ்வு உண்டாகி விடாது. கோயில் பிரவேச உரிமை அவர்களுக்கு ஏற்பட்டு விட்டால், மற்றவையெல்லாம் தாமாகவே உண்டாகி விடும். கோயிலினின்றும் வீசும் ஒளி ஹரி ஜனக் குடிசைகளுக்குள் ஊடுருவிச் சென்று அவர்கள் ஒவ்வொருவரையும் தூய்மைப் படுத்தும். உடனே எல்லா ஹரிஜனங்களும் கோயில்களுக்குள் சென்று விட வேண்டுமென்ற அவசியமில்லாவிடினும் அந்த உரிமையாவது அவர்களுக்குக் கிடைத்து விட்டால் போதும். ஹிந்துக்கள் ஒன்று தீண்டாமையை ஒழிக்க வேண்டும்; அல்லது அவர்கள் மத்தியிலிருந்து என்னை ஒழித்துவிடவேண்டும்.

ஆல மரத்தின் அடியில்

என்ன ஒய்யாரம்! என்ன தளுக்கு! என்ன ஸினிமாப் பேச்சு! என்ன ஸிகரெட் புகைச்சல்! தற்கால மாணவர்களிடம் இந்த அலங்காரங்கள் தான் பெரிதும் காணப்படுகின்றன. ஆனால் இந்த மாணவர்கள் படிக்கின்ற கலாசாலைக் கட்டிடங்களைப் பார்த்தாலோ மகா தடபுடலா யிருக்கின்றது. கல்விக்கு என்று சர்க்கார் செலவிடும் காசில் பெரும் பகுதி கட்டடங்கள் கட்டுவதிலேயே கரைந்து விடுகின்றது என்பதை அநுபவத்தில் கண்டு வருகின்றோம். ஜனங்கள் தரும் வரிப் பணத்தினின்று கல்விக்கு ஓர் பகுதி செலவிடுவதாக சர்க்கார் அடிக்கடி சொல்லிக் கொள்கிறார்கள்.

இந்த வருடத்திலும் மூன்றே கால் லக்ஷ ரூபா 'கல்வி'க்கென்று வேண்டுமென்று கல்வி மந்திரி சட்ட சபையில் கரடியாய்க் கத்தினார். எதற்கையா மூன்றே கால் லக்ஷமென்றால் பள்ளிக்கூடக் கட்டடங்களுக்கு உதவவேண்டுமாம். வெகு அழகு!

இப்படியாக மந்திரி கேட்டபோது சட்ட சபையில் ஒரு அங்கத்தினர் பேசியது இங்கு கவனிக்கத் தக்கவை;

"பள்ளிக்கூடங்களை ஆல மரங்களுக்கு அடியில் நடத்த வேண்டுமென்பது எனது கருத்து. பையன்கள் சாதாரண பாய்களின் மீது உட்கார்ந்தாலும் படிப்பு வாராமற் போய்விடாது. இந்தக் கல்லுக் கட்டடங்களும், இதர ஆர்ப்பாட்டங்களும் வீண் செலவுகளே யன்றி இம்மியாவது கல்வி யபிவிர்த்திக்கு வேண்டுவன வல்ல" என்று அவர் கூறினார்.

கம்பன், காளிதாஸன் முதலிய நம் நாட்டிற் சிறந்த கவிஞர்களெல்லாம் தோப்புகளிலும், துறவுகளிலும் இருந்து கல்வி கற்றவர்களே யன்றி எலெக்ட்ரிக் விசிறியினடியில் இருந்து கற்றவர்களன்று. இயற்கை வனப்பின் மத்தியில் கல்வி யூறிய காரணத்தால் அவர்கள் மகா கவிகளாக வளர்ந்தார்கள். ஆனால் இன்றைக்கு இத்தனை தடபுடல் கட்டடங்கள் நடுவில் தயாராகும் சிறுவர்களில் ஒரு கம்பனையும் காணோம், ஒரு ஷேக்ஸ்பியரையும் காணோம். ஆகவே கல்லிலும், சுண்ணாம்பிலும் காசை மேலும் மேலும் கொட்டுவானேன்? ஆசிரமங்களமைத்து, ஆலமரத்தினடியில் பள்ளிக்கூடம் நடத்திய நமது புராதன வழியை இனி பின்பற்றினாலன்றி நாட்டின் கல்விக்கு கதி மோக்ஷமேயில்லை.

அசடு வழிகின்றது

சமீபத்தில் உத்யோக வேட்டைக்காரர்களுக்கென்று சர்க்கார் நடத்திய பரீக்ஷையில் (Public Services Commission Examination) எத்தனை பிள்ளைகள் எவ்வாறு அசடு வழிந்திருக்கிறார்களென்று ஓர் செய்தி கிடைத்திருக்கிறது. அதைக் கவனிப்போம்:—

கேள்வி:—லெஜிஸ்லேடிவ் கவுன்ஸில் என்றால் என்ன?

பதில்கள்:—

1. சட்டத்தையும் அமைதியையும் காக்கும் சபை. 2. கவுன்ஸிலுக்கு வேலை கிடையாது. பேசுவது தான் கவுன்ஸில் வேலை. வேலை செய்ய காரியஸ்தர்கள் உண்டு. 3. சென்னையில் இரண்டு சட்ட சபைகளுண்டு. ஒன்றுக்குப் பெயர் அஸ்ஸெம்பிளி இன்னொன்று கவுன்ஸில். ஸெக்ரடரி ஆப்ஸ்டேட் (இந்தியா மந்திரி) என்பவர் ஒரு அங்கத்தினர். மெஜாரிடி பார்த்து கவர்னர்-ஜனரல் தீர்ப்பு சொல்வார். 4. சட்ட சபையில் அக்ராஸனராக இருப்பவர் கவர்னர்.

இந்த பிரகஸ்பதிகள் இன்னொரு கேள்விக்கு அசட்டுப் பதில்கள் தந்திருப்பதையும் பாருங்கள்:

கேள்வி:—

முனிஸிபாலிட்டி என்றால் யாது?

பதில்கள்:—

1. பிள்ளை பெறும் ஸ்திரிகளுக்கு உதவி செய்ய முனிஸிபாலிட்டிகள் ஏற்பட்டிருக்கின்றன. 2. கலெக்டரின் தயவையும், கவர்ன்மெண்டின் தயவையும் நாடி, குடிகளுக்கு வரி விகிதங்களைப் பிரித்து ஏற்படுத்தும் தொழில் முனிஸிபாலிட்டியினுடையது. 3. சாக்கடை தருவது முனிஸிபாலிட்டி. 4. வீட்டு வரி யென்பது சேர்மனுக்குக் கொடுக்கப்படும். 5. டைமண்ட் ஜூபிலி, வெள்ளி ஜூபிலி குழந்தைக் காக்ஷி முதலியவைகளை நடத்துவது முனிஸிபாலிட்டிகள்.

இது தவிர இன்னும் இந்த மாணவர்கள் பிதற்றியுள்ள பதில்கள் பற்பல. இப்பேர்ப்பட்ட அறிவை யூட்டும் கலாசாலைகள் நடந்தாலென்ன, இடிந்தாலென்ன? இந்தப் பிள்ளைகள் பரீக்ஷைகளில் தேறவில்லையென்றால் எப்படித் தேறுவார்களென்று கேட்கிறோம்.

தமாஷாவுக்கு 190000 ரூபாயா?

டெல்லி சட்ட சபையில் வரவு செலவு நிரந்தரக் கமிட்டி கூடி அங்கீகரித்துள்ள செலவுகள் பின்வருமாறு:—

3-வது வட்ட மேஜைத் தமாஷாவின் செலவுக்காக 190000.

'சீர்திருத்த ஆபீஸை நடத்த 179000 ரூ.

வைஸ்ராய் வீட்டுக்கு சாமான்கள் வாங்குவதற்காக 15000.

மண்டூக புத்தி

கல்கத்தா "ஸ்டேட்ஸ்மன்" பத்திரிகையின் ஆசிரியனான ஆல்பிரட் வாட்ஸன் ஏதோ தவளையின் மூளையை இரவல் வாங்கித் தலையில் வைத்துக் கொண்டிருக்கிறான் போலிருக்கிறது. சீமையில் தேசீய லிபரல் கிளப்பில் அவன் பேசிய போது காந்தி யடிகளைப் பற்றி அவன் என்ன சொன்னான் தெரியுமா?

"உலகின் பிற்போக்குக்குக் காரணமானவர் காந்தி. அவரது கொள்கையும் பிற்போக்கானது. அவரைப் பின்பற்றுபவர்களில் பாதிப் பேர் பட்டினியாலும், கொள்ளை நோயாலும் சாகின்றனர். முதலாளிகள் ஆட்சியை இந்தியாவில் ஸ்தாபிப்பதற்காக காந்தி முயலுவதால் பணக்காரர்கள் அவருக்கு உதவி செய்கின்றனர். வங்காளத்தில் நிலச்சுவான்தார்கள் தங்கள் தங்கள் ஊர்களை மேற்பார்வை பாராததினாலேயே புரட்சி இயக்கம் அங்கு ஓங்குகிறது. கைத்தொழில் முதலாளிகளிடம் இந்திய அரசியலை ஒப்படைத்தால் ஆபத்து. ஆகவே இந்தியாவில் கல்வி பரப்ப வேண்டுவது அவசியம்"

காந்தியைப் பின் பற்றுகிறவர்கள் எத்தனை பேர் கொள்ளை நோயாலும், பட்டினியாலும் சாகின்றனரென இந்த மண்டூக மூளை கணக்குக் காட்டுமா? முதலாளி அரசியலை ஸ்தாபிக்கவே காந்தி தோன்றி யிருக்கிறதாக எண்ணிக் கொள்ளும் இந்த ஆல்பிரட் வாட்ஸனுக்கு ஒரு பத்திரிகாசிரியராக இருக்க யோக்யதை உண்டா இல்லையா வென்பதை வாசகர்களே நிர்ணயிக்கவும்.

புதிய நூல்! சங்கு நூல்!!

மகா தியாகம்

மகாத்மாவின் உபவாச சரித்திரம்

விலை அணா 4.

சங்கு ஏஜெண்டிடம் விசாரிக்கவும்.

சந்தியில் கிடக்கிறது

ஸ்ரீயுத கேசவன் நாயர் என்ற காங்கிரஸ் கைதி உண்ணா விரதமேற்று மூன்று வாரங்களுக்கு மேலாகி விடவே அன்பர்கள் திடுக்கிட்டனர். ஸ்ரீயுத கேலப்பன் கேசவன் நாயரைக் கண்டு பேச அநுமதி யளிக்குமாறு ஜெயில் சூப்ரண்டைக் கேட்டார். உத்தரவு கிடைக்கவில்லை. பிறகு சட்ட மந்திரியிடம் நேரில் வந்து கேட்டார். "நான் அதற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்று சட்ட மந்திரி சென்னையில் கேலப்பனுக்கு வாக்களித்தார். ஆனால் கேலப்பன் மலையாளத்துக்குச் சென்று டெப்டி மாஜிஸ்திரேட்டைக் கேட்ட போது தனக்குத் தெரியாது என்று அந்த அதிகாரி சொன்னாராம். பிறகு ஜில்லா மாஜிஸ்திரேட்டையே கண்டு கேலப்பன் கேட்ட போது "சிறையில் கைதியைப் பார்க்க அநுமதிக்க முடியாது" என்று அவர் சொல்லி விட்டாராம். சென்னைச் சட்ட சபையில் ரொம்ப அழுத்தலோடு சட்ட மந்திரி கிருஷ்ண நாயர் சொன்ன சொல் இன்றைக்கு சந்தியில் கிடக்கின்றது. தலை யொன்று சொல்ல, வால் இன்னொன்று செய்வதை யொப்ப, சட்ட மந்திரி அநுமதி தர ஜில்லா மாஜிஸ்திரேட் அநுமதி மறுக்கிறார். இப்படி தமது பெயர் கெடுவதைக் கண்ட பின்னரும், கிருஷ்ணன் நாயர் தமது உத்தியோகத்தில் அட்டை போல ஒட்டிக் கொண்டிருக்கும் விந்தையை என்னென்பது?

பிரிட்டிஷாருக்கு எச்சரிக்கை

மிஸ்டர் பர்ட்ராண்டு ரஸெல் லண்டன் "மாஞ்செஸ்டர் கார்டியன்" பத்திரிகைக்கு எழுதியுள்ள ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதாவது:— "சர்வகக்ஷி மகா நாட்டின் யோசனைகளைக் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளவே செய்யாது. அதன் ஒத்துழைப்பில்லாமல் இந்தியாவில் அமைதி யேற்படாது என நான் பிரிட்டிஷாருக்கு எச்சரிக்கை செய்கிறேன். உண்மையான அதிகாரத்தை ஜனங்களிடம் மாற்றினாலன்றி இந்தியாவை ராணுவ பலத்தைக் கொண்டே ஆள வேண்டி யிருக்கும்."

ஏரவாடாவில் தம்மை வந்து காணும்படி காந்திஜி டாக்டர் அம்பேத்கரை அழைத்திருக்கிறார். டில்லிக்குப் போய்த் திரும்புகையில் அம்பேத்கர் மகாத்மாவைக் காண்பார்.

நமது கிளிஞ்சல் குவியல்

பம்பாயில் ராம்பாவ் துகாராம் என்ற காங்கிரஸ்காரருக்கு 1 வருஷம் கடுங்காவல் தண்டனை.

பம்பாயில் காங்கிரஸ் காரியங்களுக்குத் தலைமை வகித்து நடத்தி வந்ததாகச் சொல்லப்பட்ட ஸ்ரீயுத எஸ். கே. படீல் கைது செய்யப்பட்டார்.

பம்பாயில் பஞ்சு மார்க்கட்டில் சில நாட்களுக்கு முன்னே இந்திய வியாபாரிகளுக்கும் ஐரோப்பிய வியாபாரிகளுக்கும் ஏதோ ஓர் ஒப்பந்தம் நிறைவேற்றி வைக்கப்பட்டது. ஆனால் அந்த ஒப்பந்த விஷயத்தில் பம்பாய் காங்கிரஸ்காரர்கள் அபிப்பிராயம் வேறுபட்டதால் பஞ்சு மார்க்கட்டு மறியல் மீண்டும் அங்கு தொடங்கப்பட்டு விட்டது.

அஹமதாபாத்தில் அம்பாலால் சாராபாய் என்று ஓர் லக்ஷாதிபதி யிருக்கின்றார். அவருடைய பெண் ஸ்ரீமதி மிருதுளா காங்கிரஸ் வேலை செய்து வருவதாகப் போலீசார் சந்தேகித்து அவள் அஹமதாபாத்தில் நுழையலாகாதென்று தடை யுத்தரவு போட்டிருக்கிறார்கள்.

பாலாஸோர் என்ற ஊரில் 24வது ஸர்வாதிகாரியாயிருந்த ஸ்ரீமதி ஹரிமணி தேவிக்கு 2 மாதக் கடுங்காவல் தண்டனை.

ஆந்திரத் தலைவர் தண்டு நாராயணராஜு காங்கிரஸ் இயக்கத்தை நடத்துவதாகக் கண்டுபிடிக்கப்பட்டு 6 மாதம் காவல் தண்டனையும், 200 ரூபா அபராதமும், கொடுக்கத் தவறினால் 1½ மாத தண்டனையும் விதிக்கப்பட்டார்.

சென்னையில் ரங்கநாத முதலியார், ராமசாமி நாயக்கர், வரதராஜ முதலியார், திம்ம ரெட்டி என்ற நான்கு பேர் அந்நியத் துணிக் கடையை மறியல் செய்ததற்கு தலா 3 மாதத் தண்டனை விதிக்கப்பட்டனர்.

கல்கத்தாவுக் கடுத்த செராம்பூரில் தேசியக் கொடி நாட்டக் கூடாதென்றும், 5 பேருக்கதிகமாகக் கூடக் கூடாதென்றும் 144 தடை யுத்தரவு.

கல்கத்தாவில் துண்டுப் பிரசுரம் வழங்கியதற்கு 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

'சுதந்திர தினம்'

ஜனவரி ௴ 26௳ சுதந்திர தினமாக காங்கிரஸ் தொண்டர்கள் கொண்டாடினரென்ற செய்திகள் பல விடத்தினின்று கிடைத்துள.

சென்னை சட்ட சபையில் நடுப்பகலில் 'காங்கிரஸ் சுயேச்சை'க் கக்ஷியைச் சேர்ந்த தொண்டர்கள் பட்டாஸ் வெடியை சபை மத்தியில் வீசியதோடு, யூனியன் ஜாக் கொடியைக் கொளுத்தி எரிந்தனர். புரட்சி வாழ்க" "காந்திக்கு ஜே" கூவினர். நாமக்கல் காசிலிங்கம், ராம பிஷாரொட்டி, ஜயலிங் பாட்டியா முதலிய பலர் கைது செய்யப்பட்டனர். சம்பவம் நடந்த போது அங்கத்தினர்கள் திடுக்கிட்டு விட்டனர்.

காலையில் ஸென்டிரல் ஸ்டேஷனுக்கருகே காரைக்குடி கணபதி தலைமையில் ஊர்வலம் சென்றதாக 8 பேர்கள் கைது செய்யப்பட்டனர். ஓய். எம். ஸி. ஏ க்கருகில் 'சுதந்திர தின' விளம்பரங்களை யொட்டியதாக இருவர் கைது செய்யப்பட்டனர். மாலையில் ஹைக்கோர்ட்டுக்கருகில் 'சர்வாதிகாரிகள் மகாநாடு' நடத்த முயன்ற சுமார் 45 பேர்கள் கைதியாயினர். திருவல்லிக்கேணி கடற்கரையில் துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக 4 பேர் கைதியாயினர். சூளையிலும் சில தொண்டர்கள் கைதியாயினர். அன்று சில ஸ்திரீ தொண்டர்களும் கைதியாயினர்.

பாட்னாவில் 19 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 10 பேர்கள் ஊர்வலமாக வந்து, காங்கிரஸ் கொடி நாட்ட முயற்சித்தனர்.

"நாளுக்கு நாள் நிலைமை எவ்வாறு மாறி வருகிறதென்பதை அறிந்து, அதனை யனுசரித்தே நான் உபவாஸத்தைத் தொடங்குவது குறித்து முடிவு செய்ய உத்தேசித்திருக்கிறேன்" என்று மகாத்மாஜி ஒரு பத்திரிகா நிருபரிடம் கூறினார்.

ஹரிஜனப் பெண்களின் படிப்பிற்காக நரஸபூர் ஸ்ரீயுத பி. ரங்கநாயகலு நாயுடு 6000 ரூபாய் தந்திருக்கிறார்.

டெல்லி சட்ட சபையில் ரங்கய்யர் தயாரித்த ஆலயப் பிரவேச மசோதாவுக்கு வைஸ்ராய் அநுமதி தருவாரெனத் தெரிகிறது.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.